2024 – அக்டோபர் மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 310/2019 c/w 309/2019*

*2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 4, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 4, Dr. R. கோகுல கிருஷ்ணன் |
| தகப்பனார் பெயர் | : | P.இராதாகிருஷ்ணன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | துணை மருத்துவர் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை |
| வயது | : | 37 |

தேதி: **24.10.2024.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். MCOP No.310/2019ன் மனுதாரர் வீரதுரை 48 வயதுடைய ஆண் 20.032019 அன்று இரவு 12.10 மணியளவில் திருச்சி அரசு மருத்துவமனைக்கு பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்துமேல் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். அவருக்கு இரண்டு கால்களும் மிகவும் மோசமாக சேதம் அடைந்து இரத்தக்குழாய் பிரச்சினைகளும் ஏற்பட்டு சிகிச்சைக்காக அழைத்து வந்தனர். இரத்தக்குழாய் அறுவை சிகிச்சை செய்யும் பணி மருத்துவர் அன்றைய தேதியில் பணியில் இல்லாத காரணத்தினால் மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு 20.03.2019ல் இரவு 01.45 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இரண்டு கால்களிலும் இரத்தக்குழாய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் உடனடியாக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி வீரதுரை என்பவருக்கு

சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான மருத்துவ குறிப்புகள் **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

இரத்தக்குழாய் அறுவை சிகிச்சை சம்மந்தப்பட்ட மருத்துவர் அன்றைய தேதியில் இருந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. நான் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. இரத்த இழப்பு ஏற்பட்டதால் எதிர்ப்பு சக்தி மருந்துகள், I V Fluids, I V Anti biotics, Blood Transfusion நோயாளியை நிலைப்படுத்தி மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்றைய தேதியில் எந்தெந்த மருத்துவர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் அவசர சிகிச்சை மருத்துவர் Dr. சதிஷ், பொது அறுவை சிகிச்சை மருத்துவர் Dr. மணிமாறன், எலும்பு முறிவு மருத்துவர் Dr. சுப்ரமணியன் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் அன்றைய தேதியில் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியாற்றி வந்தேன். நான் 2020 வருடத்தில்தான் திருச்சி அரசு மருத்துவமனைக்கு பணி மாறுதல் ஆகி வந்தேன். இந்த மருத்துவ சிகிச்சை குறித்த விவரங்களை அன்றைய தேதியில் பணியில் இருந்த மருத்துவர்கள் செய்ததை தான் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சிகிச்சை குறித்த விவரங்கள் நேரடியாக தெரியாது என்றும் வேறு மருத்துவர்கள் கொடுத்த சிகிச்சை குறிப்புகளை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**